# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



03.02.2026 நிகழ்வுகள்

### 1. வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் ரூ. 100 கோடி இலக்கை அடைய நடவடிக்கை என்ன?

**டி.ஆர்.பாலு**



வேளாண் பொருட்களின் ஏற்றுமதி இலக்கு தற்போதைய அளவை விட இருமடங்காக(ரூ. 100 பில்லியன்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா என நாடாளுமன்றத்தில் திமுக பொருளாளர் டி. ஆர். பாலு கேள்வி எழுப்பியுள்ளார். அந்த இலக்குகளை அடைவதற்காக, இந்திய வேளாண் பொருட்களின் தரம் மற்றும் அளவை உறுதிசெய்ய செயல்படுத்தப்படும் சிறப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் யாவை? ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக வழங்கப்படும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் அடங்கிய சிறப்புத் தொகுப்புத் திட்டங்கள் ஏதேனும் இருந்தால், அதன் விவரங்கள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 2. நீர் மூலம் பரவும் நோய்களை தடுக்க நடவடிக்கை என்ன?

**திருச்சி சிவா**



கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு முழுவதும் நீர் மூலம் பரவும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்து திமுக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். பாதுகாப்பற்ற நீர் மற்றும் சுகாதாரமின்மை ஆகியவற்றால் ஏற்படும் இறப்பு விகிதம் என்ன? நீர் மூலம் பரவும் நோய்கள் குறித்து, குறிப்பாக கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன? நோய்களின் பாதிப்புகளைக் குறைப்பதற்காக, மக்களிடையே நீர் சுத்திகரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 3. பெண்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பட்டியலினத்தவர்களால் நடத்தப்படும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு நிதியுதவி

**அரக்கோணம் எஸ்.ஜெகத்ரட்சகன்**



டிபிஐஐடி-யால் அங்கீகரிக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்த தரவுகளை அரசாங்கம் பராமரிக்கிறதா என்று திமுக அரக்கோணம் தொகுதி மக்களவை உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு: பெண்களால் நடத்தப்படும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் குறித்த தரவுகளை அரசாங்கம் தொகுக்கிறதா, அப்படியானால், அத்தகைய நிறுவனங்களின் சதவீதம் மற்றும் எண்ணிக்கை என்ன? ஓபிசி, எஸ்சி மற்றும் எஸ்டி சமூகங்களைச் சேர்ந்த நபர்களால் நிறுவப்பட்ட நிறுவனங்கள் குறித்த தரவுகளை அரசாங்கம் பராமரிக்கிறதா? மேலும் அந்நிறுவனர்களை ஆதரிப்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டங்கள், சலுகைகள் அல்லது வழிகாட்டுதல் நடவடிக்கைகள் யாவை? கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் மற்றும் வழிமுறைகளின்கீழ் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியின் விவரங்கள் என்ன?

### 4. சூரிய மின்சக்தி கூரை அமைக்கும் திட்டம். செயல்படுத்துவதில் தாமதன் ஏன்?

**பி.வில்சன்**



பிரதம மந்திரி சூர்யகர்: முஃப்ட் பிஜ்லி யோஜனா திட்டத்தின் கீழ் சூரிய கூரைகள் அமைப்பதற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் முடிக்கப்பட்ட சூரிய மின்சக்தி அமைப்புகளின் எண்ணிக்கை, விண்ணப்பங்களுக்கும் பயனாளிகளுக்கும் இடையிலான இடைவெளிக்கான காரணங்கள், ஒப்புதல் அல்லது செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் திமுக எம்.பி. பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். இதுவரை நிறுவப்பட்ட அமைப்புகள், நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் குறித்த விவரங்கள், சவால்கள் மற்றும் திருத்த நடவடிக்கைகள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 5. தமிழ்நாட்டில் AHIDF திட்டத்தின் செயல்பாடுகள்

**திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை**
**காஞ்சிபுரம் செல்வம்**





திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் கால்நடை பராமரிப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (AHIDF) திட்டத்தின் கீழ் செயல்பாட்டிலுள்ள திட்டங்களின் விவரங்கள் மற்றும் மொத்த எண்ணிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் திமுக உறுப்பினர்கள் சி. என். அண்ணாதுரை மற்றும் செல்வம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO), குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் தனியார் தொழில்முனைவோர் AHIDF திட்டத்தினால் பயன்பெற ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? இந்த மாவட்டங்களின் கிராமப்புற மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் சிறு அளவிலான பால் பதப்படுத்தும் அலகுகள், மதிப்புக்கூட்டல் மற்றும் குளிரூட்டப்பட்ட விநியோகச் சங்கிலி உள்கட்டமைப்பை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடையே இத்திட்டத்தை பிரபலப்படுத்த திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் விழிப்புணர்வு, திறன் மேம்பாடு அல்லது பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுமா? என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

### 6. பிரதமர் வீடு வழங்கும் திட்டம்-தாமதங்களை சரிசெய்யுமா ஒன்றிய அரசு?

**காஞ்சிபுரம் செல்வம்**




காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா-கிராமின் (PMAY-G) திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட, கட்டப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்ட வீடுகளின் விவரங்கள் குறித்து திமுக காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார். அவர் கேட்டுள்ளதாவது:-

காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதியில் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர் மற்றும் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் தகுதியுள்ள மக்களில் அவர்களின் விகிதாசாரப் பங்கு எவ்வளவு? காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதியில் உள்ள ஏராளமான தகுதியுள்ள குடும்பங்கள், திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும், இன்னும் தற்காலிக அல்லது நெரிசலான வீடுகளில் வசித்து வருவஅதன் காரணம் என்ன? நிலுவையில் உள்ள வீடுகளின் கட்டுமானத்தை விரைவுபடுத்தவும், தவணைகளை விடுவிக்கவும் மற்றும் புதிதாகக் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு அடிப்படை சேவைகளை வழங்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

### 7. பெரு நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்துக!

**ராஜாத்தி சல்மா**



நூறு கோடிக்கு மேற்பட்ட மூலதனம் கொண்ட பெரிய பொது நிறுவனங்களில் பெண் இயக்குநர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க ஒன்றிய அமைச்சகத்திடம் உள்ள திட்டங்கள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். 2014ஆம் ஆண்டுமுதல் விதியை மீறி பெண் பிரதிநிதித்துவத்தை அனுமதிக்காத சம்பவங்களின் எண்ணிக்கை மற்றும் எந்தெந்த நிறுவனங்கள் மீது தண்டனை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்த விவரங்கள் யாவை? 2021ஆம் ஆண்டுமுதல் அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு, நிறுவனங்களில் அதிக பாலினப் பன்முகத் தன்மையை ஊக்குவிப்பதற்காக, பணியிடப் பாலின சமத்துவச் சட்டத்தை இயற்ற இந்திய அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 8. திருநங்கைகளுக்கான ரேஷன் அட்டை!

**ராஜாத்தி சல்மா கோரிக்கை**

திருநங்கை சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்களுக்கு ரேஷன் அட்டைகள் வழங்கப்படாதது குறித்து ஒன்றிய அரசின் கவனத்திற்கு தனது நாடாளுமன்ற கேள்வியின் மூலம் கொண்டு சென்றுள்ளார் திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா. அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில், குறிப்பாக உணவுப் பாதுகாப்புத்துறையில், திருநங்கை சமூக உறுப்பினர்களைச் சேர்ப்பதை உறுதிசெய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? திருநங்கை சமூகத்தைச் சேர்ப்பது குறித்த NALS A தீர்ப்பின்படி, 2021ஆம் ஆண்டு முதல் திருநங்கைகளுக்கு வழங்கப்பட்ட ரேஷன் அட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 9. சேலம் உருக்காலையில் முதலீடுகள் நிறுத்தியதது ஏன்?

**தமிழச்சி தங்கபாண்டியன்**



2,000-க்கும் மேற்பட்ட நேரடி வேலைவாய்ப்புகளை வழங்கும் சேலம் உருக்கு ஆலையின் முதலீடுகளை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது ஏன் என திமுக தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார். JSW-SAIL கூட்டுத் திட்டத்தில் தமிழ்நாடு சேர்க்கப்படாததற்கான காரணங்கள் யாவை? சிறப்பு எஃகுக்கான உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகை (PLI) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகள் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதா? உருக்குத் துறை முதலீடுகள் மாநிலங்களுக்கு இடையில் சமமாகப் பகிரப்படுவதை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

### 10. ஏழை கைதிகளுக்கு ஆதரவளிக்கும் திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?

**கோவை கணபதி ராஜ்குமார்**
**தேனி தங்க தமிழ்ச்செல்வன்**





2023 ஆம் ஆண்டு கைதிகளுக்கு ஆதரவளிக்கும் திட்டத்தின்கீழ், ஏழை கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்துவதற்காக அரசாங்கம் தனது தற்போதைய வழிகாட்டுதல்கள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOPs) திருத்தியுள்ளதா என திமுக மக்களவை உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார் மற்றும் தங்க தமிழ்ச்செல்வன் கேள்வி எழுப்பியுள்ளார்கள். கைதிகளுக்கு ஆதரவளிக்கும் திட்டம்-2023இன் கீழ், இன்றுவரை மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி எவ்வளவு? என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

### 11. மருந்து உற்பத்தியில் இந்தியா இறக்குமதி மருந்துகளை சார்ந்திருக்கிறதா?

**டாக்டர் கனிமொழி சோமு கேள்வி**



மருந்து உற்பத்தியில் இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருட்களை (APIs) இந்தியா எந்த அளவிற்குச் சார்ந்துள்ளது என மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். அதிக இறக்குமதி சார்புநிலை கொண்ட முக்கிய மூல நாடுகள் மற்றும் சிகிச்சை பிரிவுகள் யாவை மற்றும் புவிசார் அரசியல் நிலையற்ற தன்மைகளால் எழும் கண்டறியப்பட்ட அபாயங்கள் யாவை? எனவும் அவர் கேட்டுள்ளார்.

### 12. அமெரிக்க வரியால் சரியும் ஏற்றுமதி

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி**



ஏப்ரல் 2025 முதல் உயர்த்தப்பட்ட வரியினால் அமெரிக்காவிற்கான ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள சரிவு குறித்த தரவுகளை அரசாங்கம் சேகரித்து வெளியிட வேண்டும் என திமுக மக்களவை உறுப்பினர் ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். ஸ்மார்ட் போன்கள், மருந்துகள், ரத்தினங்கள், சூரிய மின்சக்திப் பலகைகள், உலோகங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் போன்ற முக்கியத் துறைகளில் ஏற்பட்டுள்ள ஏற்றுமதிச் சரிவு மற்றும் உற்பத்தியில் மதிப்பிடப்பட்ட இழப்பு குறித்த விவரங்கள் யாவை? வியட்நாம், மெக்சிகோ மற்றும் சீனா போன்ற போட்டி நாடுகள் இந்தியாவின் இழந்த சந்தைப் பங்கைக் கைப்பற்ற அனுமதித்த ஒப்பீட்டுத் தீர்வைக் கட்டமைப்பு குறித்து அரசாங்கம் ஆய்வு நடத்தியுள்ளதா? இந்தியாவின் ஏற்றுமதித் தளம் மேலும் சிதையாமல் தடுக்க, சூரத், மும்பை மற்றும் கோயம்புத்தூர் போன்ற குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகள் உட்பட பாதிக்கப்பட்ட ஏற்றுமதிக் குழுமங்களுக்கு ஆதரவளிக்க முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை? எனவும் அவர் கேட்டுள்ளார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (03.02.2026) திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு வேட்டி, புடவைகளை வழங்கினார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவர் என். சிற்றரசு, மாமன்ற உறுப்பினர் எம்.காமராஜ், மண்டல இணை ஆணையர் திருமதி கி. ரேணுகாதேவி, கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி சி.நித்யா மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.




திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் நசரத்பேட்டை பகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் அரசின் சாதனைகள் விளக்கி சிறப்புரையாற்றினார்கள். உடன் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, கழக பேச்சாளர் சைதை சாதிக், தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, மா.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 349 வது நாள்!

## கொளத்தூர் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, பிப். 4–

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 349 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (03.02.2026), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 68அ, K.C கார்டன், இரண்டாவது தெரு, பெரவள்ளூர். 2) வட்டம் 67, மதுரை சாமி மடம், உருது பள்ளி அருகில், அம்பேத்கர் நகர். ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை



அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இது தான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், D.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, P.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




தருமபுரி தனியார் மண்டபத்தில் நடைபெற்ற திமுக சட்டத்துறை வடக்கு மண்டல மாநாட்டில் திமுக சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி,வரவிருக்கும் தேர்தல் பணிகள் குறித்து பயிற்சி வகுப்பும்,ஆலோசனைகளும் வழங்கி சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ,திமுக சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் இரா.தாமரைச்செல்வன், என்.மருதுகணேஷ், ஜி.சந்திரபோஸ்,எஸ்.வீரமணி, மீஞ்சூர் கே.சுரேஷ்,மாவட்ட அமைப்பாளர்கள் டி.சந்திரசேகரன்,ஆர்.சிவன், இ.வெங்கடேஷ் ராஜா, ஆர்.திம்மராயப்பா,எஸ்.அருள், எஸ்.செல்லப்பன்,ராம்பிரகாஷ், பி.கே.முருகன்,எம்.விசுவபாரதி, பி.தம்பிதுரை,தர்மபுரி,கிருஷ்ணகிரி,சேலம் மாவட்டங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி மாவட்ட மற்றும் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளில் திருப்போரூர் பேரூர் தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டுதலின்படி, பேரூர் கழகச் செயலாளர் பேரூராட்சித் தலைவர் மு.தேவராஜ் ஏற்பாட்டில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், வடக்கு ஒன்றியச் செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனுர் எம்.சேகர், எஸ்.சசிகலா, எஸ்.ஆஸ்கர் அலி, ஆர்.பரசுராமன், ஜி.பலராமன், இ.ரமேஷ், டி.செங்குட்டுவன், கே.ரவிக்குமார், எஸ்.ஏழுமலை, ஓய்.மோகன், டி.டி.சேகர், ஏ.கமலக்கண்ணன், வி.வீரபத்திரன், ஏ.குமரன், கே.சந்திரன், எஸ்.பாலு, ஆர்.சுப்பிரமணி, டீ.பரணிதரன், எஸ்.அன்பழகன், எஸ்.சி.பி.சக்கரவர்த்தி, எஸ்.கோவிந்தராஜ் மற்றும் வார்டுச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் பலர் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.